Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 4.50

சுடர்: 6 பிரமோதூத ஸ்ரீ பங்குனி மீ 24 உ. ஞாயிற்றுக்கிழமை [07-04-1991] UTHAYAN — A Lively National Tamil Daily கதிர்: 125

# கிழக்கில் ஒரே நாளில் 17 படையினர் பலி!

## ஸ்ரீலங்கா இராணுவத்துக்கு நெருக்கடி

கொழும்பு, ஏப்ரல் 7

கிழக்கு மாகாணத்திலும் விடுதலைப் புலிகளின் தாக்குதல்கள் தீவிரமடைந்து வருகின்றன. நேற்றுடன் முடிவடைந்த 24 மணி நேரத்தில் மட்டும் கிழக்கில் 17 அரச படையினர் உயிரிழந்திருக்கின்றனர்.

புலிகள் நடத்திவரும் அதிரடித் தாக்குதல்களினால் வடக்கில் மட்டுமன்றி கிழக்கிலும் அரசுப்படைகளுக்கு நெருக்கடி நிலைமை தோன்றியுள்ளது.

கடந்த 24 மணி நேரத்தில் கிழக்கில் 17 படையினர் உயிரிழந்ததை கொழும்பில் இராணுவப் பேச்சாளர் ஒருவர் ஒப்புக்கொண்டார்.

**மட்டக்களப்பு**

மட்டக்களப்பு மாவட்டம் புனிச்சங்கேணி என்னும் இடத்தில் விடுதலைப் புலிகள் நடத்திய திடீர்த் தாக்குதலில் 11 பாதுகாப்புப் படையினர்

[4 ஆம் பக்கம் பார்க்க]

## ஓட்டுமடத்தில் விபத்து! இளைஞன் மரணம்!!

யாழ்ப்பாணம், ஏப்ரல் 7

யாழ்ப்பாணம் ஓட்டுமடம் பகுதியில் நேற்று மாலை 5.30 மணியளவில் இடம்பெற்ற லொறி—மோட்டார் சைக்கிள் விபத்தில் மோட்டார் சைக்கிளில் வந்த இளைஞர் ஒருவர் பலியானார்.

ராசன் சந்திரகுமார் [வயது 22] என்ற சங்கானையைச் சேர்ந்த இளைஞராவார்.

மோட்டார் சைக்கிளுடன் மோதிய தனியார் லொறி நிறுத்தாமல் சென்றுவிட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

[உ-5]

## நேற்று இருளும் வேளை புங்குடுதீவில் குண்டு வீச்சு!

யாழ்ப்பாணம், ஏப் 7

புங்குடுதீவில் நேற்று இருளும் வேளையில் விமானக் குண்டுவீச்சுத் தாக்குதல் இடம்பெற்றது.

இந்தத் தாக்குதலில் காயமுற்ற இருவர் நேற்று யாழ் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டனர்.

மேலும் பலர் இந்தத் தாக்குதலில் காயமுற்றதாகத் தெரிவிக்கப்பட்ட போதிலும் அதனை ஊர்ஜிதப்படுத்த முடியவில்லை.

நேற்று மாலை புங்குடுதீவுப் பகுதிக்கு மேல் ஹெலிக்கொப்டர் ஒன்று வட்டமிட்டுச் சென்றது.

அதன் பின்னர் மாலை 6.30 மணியளவில் திடீரென வந்த இரண்டு பொம்மர்கள் ஐந்துக்கு மேற்பட்ட குண்டுகளை வீசிச் சென்றன.

புங்குடுதீவு முற்றவெளி மற்றும் விவசாய திணைக்கள அலுவலகம் ஆகியவற்றுக்கு அருகே இக்குண்டுகள் விழுந்து வெடித்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

காயமுற்ற எட்வேர்ட் அம்மா [வயது 67] என்ற வயோதிபமாதும், அல்லைப்பிட்டி பிரதேச சபையில் கடமையாற்றும் தொழிலாளியான ஐ. பாலசிங்கம் [வயது 33] என்ற இளைஞரும் யாழ். ஆஸ்பத்திரிக்கு எடுத்து வரப்பட்டனர்.

[உ-5]

## திருமலை பூநகரில் கண்ணி! ராணுவ டிரக் முற்றாக சேதம்!!

### படை அதிகாரியும், சிப்பாய்களும் உயிரிழப்பு

யாழ்ப்பாணம், ஏப். 7

திருகோணமலை மாவட்டம் பூநகரில் நேற்று முன்தினம் பிற்பகல் 2.30 மணியளவில் இராணுவ டிரக் ஒன்று கண்ணி வெடியில் சிக்கி முற்றாகச் சேதமடைந்தது.

இந்தச் சம்பவத்தின்போது அந்த டிரக்கில் வந்த சிப்பாய்கள் பலர் கொல்லப்பட்டனர். கொலையுண்டோரின் எண்ணிக்கை தெரியவரவில்லை.

அலியொழுவ முகாமில் இருந்து இராணுவ டிரக் ஈச்சிலம்பத்தை முகாம் நோக்கிச் சென்று கொண்டிருந்த வேளையிலேயே பூநகரில் வைத்து விடுதலைப் புலிகள் கண்ணி வெடித் தாக்குதலை நடத்தினர். என்று தெரிவிக்

[4 ஆம் பக்கம் பார்க்க]

## ஈ. பி. டி. பியினர் இருவர் காரைநகரில் மரணம்

கொழும்பு, ஏப். 7

காரைநகர் கடற்படைத் தளம் மீது விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதலில் ஈ. பி. டி. பி. இயக்கத்தைச் சேர்ந்த இருவர் கொல்லப்பட்டனர்.

அந்தக் குழுவைச் சேர்ந்த மற்றும் மூவர் படுகாயமடைந்தனர் என்று கொழும்பில் இராணுவ வட்டாரங்கள் தெரிவித்தன.

[ஒ-எ]

## தமிழகம், புதுவைக்கும் நாடாளுமன்றுடன் தேர்தல்

புதுடில்லி, ஏப் 7

இந்தியாவில் நாடாளுமன்றத் தேர்தலுடன் தமிழ் நாடு, மேற்குவங்காளம், ஹரியானா உத்தரப் பிரதேசம் ஆகிய மாநிலங்களுக்கான சட்டசபைத் தேர்தல்களும் பாண்டிச்சேரி யூனியன் பிரதேச சட்டசபைத் தேர்தலும் நடத்தப்படும் என்று தேர்தல் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

கலைக்கப்பட்ட கேரளா மாநில சட்டசபைக்கான தேர்தலையும் நடத்தும்படி இன்னும் முறையான அறிவிப்பு மாநில அரசிடமிருந்து கிடைக்கவில்லை என்று தேர்தல் ஆணைக்குழு நேற்று அறிவித்தது.

[ஆ-எ]

## சத்திர சிகிச்சைக்கு பனையிலிருந்து “ஸ்பிரிட்”!

யாழ்ப்பாணம், ஏப். 7

பனையில் இருந்தும் ''ஸ்பிரிட்'' தயாரிக்க முடியும் என்று ஆய்வுகள் மூலம் கண்டறியப் பட்டுள்ளது!

இந்த 'ஸ்பிரிட்'டை சத்திர சிகிச்சையின் போதும்பாவிக்க முடியும்என்று கூறப்படுகிறது!

புதிய வகை 'ஸ்பிரிட்'டை உள்ளூரில் தயாரிக்க உடனடியாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்று நேற்று செயலகத்தில் நடந்த கூட்டம் ஒன்றில் வலியுறுத்தப்பட்டது

சத்திர சிகிச்சையின் போது பாவிக்கப்படும் 'ஸ்பிரிட்'டை இங்கு கொண்டுவர தடை விதிக்கப்பட்டுள்ளது தெரிந்ததே!

[ஒ-3]

மச்சந்தி முனி



பனம் பானப் பிரியர்களுக்கு வேட்டு வைக்காட்டிச் சரிதான்...!

## கொழும்புப் பயணிகள் நேற்று வந்து சேர்ந்தனர்

யாழ்ப்பாணம், ஏப். 7

கொழும்பில் இருந்து வந்து சுமார் ஒரு வாரம் வவுனியாவில் பரிதவித்து நின்ற பயணிகள் பலர் நேற்றிரவு யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தனர்.

கடந்த சில தினங்களாக வவுனியாவில் ஊரடங்குச் சட்டம் அமுலில் இருந்த போதிலும், யாழ்தேவி தினமும் வந்து திரும்பியதாகத் தெரிவிக்கப்பட்டது.

யாழ்ப்பாணம் வருவதற்காக இந்த ரயிலில் தினசரி வந்திறங்கிய பயணிகள் தொடர்ந்து வடக்கேவர அனுமதிக்கப்படாததால் அவர்கள் வவுனியாவில் பரிதவிக்க வேண்டியதாயிற்று.

இதேவேளை யாழ் நகரில் இருந்து வவுனியாவுக்கான போக்குவரத்து நேற்றும் தொடர்ந்து தடைப் பட்டிருந்தது.

[ஒ-5]

## போராளிகளின் 8 புகழுடல் அரச தரப்பு ஒப்படைப்பு?

யாழ்ப்பாணம், ஏப். 7

வன்னிப் பகுதியில் இடம்பெற்ற மோதல்களின் போது வீரமரணமடைந்ததாகக் கூறப்படும் எட்டுப் போராளிகளின் புகழுடல்களை ஸ்ரீலங்கா அரசப் படைகள் செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவிடம் ஒப்படைத்துள்ளனரா?

போராளிகளின் சடலங்களை தாங்கள் ஒப்படைத்ததாக இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் ஹமில்டன் வனசிங்க நேற்று கொழும்பில் செய்தி நிறுவனங்களுக்குத் தெரிவித்தார்.

ஆனால் இச்செய்தியை யாழ்ப்பாணத்தில் உள்ள—

[4 ஆம் பக்கம் பார்க்க]

## அரசின் புள்ளி விவரம் அதிகம்; கைக்குக் கிடைப்பதோ குறைவு!

### அரச அதிபர் விளக்கம் தர வேண்டும் எனக் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஏப்.7

யாழ்ப்பாண மாவட்டத்துக்கு அனுப்பப்படும் அத்தியாவசிய உணவுப் பொருள்களின் அளவு குறித்து—

அத்தியாவசிய சேவைகள் நாயகம் வெளியிடும் புள்ளி விவரங்களுக்கும்—

கைக்கு வந்து சேரும் பொருள்களின் அளவுக்கும்—

இடையில் பெரும் வித்தியாசம் உண்டு.

இது எப்படி நிகழ்கிறது? ஏன்? - என்பன குறித்து அரசாங்க அதிபர் தெளிவாக்க வேண்டும். சரியான புள்ளி விவரங்களுடன் உண்மை நிலையைப் பகிரங்கப்படுத்த வேண்டும்.

யாழ். செயலகத்தில் நேற்று நடைபெற்ற திணைக்களத் தலைவர்கள் மாநாட்டில் இவ்வாறு கோரப்பட்டது.

யாழ்ப்பாண மாவட்டத்தில் அத்தியாவசிய சேவைகளைச் சீராக்குவது குறித்து செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு அதிகாரிகளுக்கு விளக்கும் விதத்திலும் நேற்றைய கூட்டம் அமைந்திருந்தது.

அத்தியாவசிய உணவுப்

[4 ஆம் பக்கம் பார்க்க]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### தவறிவிட்டது

ஏப்ரல் மாதம் முதலாம் திகதி திங்கட்கிழமை நல்லூர் கோவில் பின் சந்தியிலிருந்து G P. S. வீதி ஊடாக இருபாலை சந்திக்கும் இடையில் கைச்சங்கிலி ஒன்று தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் திரு. ச. சந்தையா புத்தூர் மேற்கு, புத்தூர் ஏரந்தனை என்ற முகவரியில் அல்லது உதயன் காரியாலயத்தில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். [16378]

### அம்பாள் திருமண சேவை

B Sc BA. விரிவுரையாளர் மணப்பெண்களின் ஜாதகக் குறிப்புகள் இருக்கின்றன. இவர்களுக்கு வைத்தியர், பொறியியலாளர், B Sc. விரிவுரையாளர் மணமகன் தேவை. சின்னச்சாமி திருக்கன் சண்முகம் வீரமாகாளி அம்மன் கோவிலடி. 140, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம். [16315]

### மந்தை உணவு

எம்மால் உற்பத்தி செய்யப்படும் சறவைப் பசு உணவு விற்பனைக்கு உண்டு. 25 கிலோ பை ஒன்றின் விலை ரூ. 280/- யாழ். மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம், கலாசாலை வீதி, திருநெல்வேலி. [சி-5928]

### கல்வி

கணிதம் O/L 90, 91 பரீட்சைகளில் அதி விசேட சித்தி, விசேடசித்தி பெறுவதற்காக கற்பிக்கப்படும். 15 ஆண்டுகள் O/L விடைத்தாள்கள் திருத்திய அனுபவமுள்ள ஆசிரியரினால் கற்பிக்கப்படும். 85 சிவன்கோவிலடி, திருநெல்வேலி. [19365]

புலமைப்பரிசில் வகுப்பிலிருந்து G. C. E. [O/L] வரை கட்டாய பாடமாகிய கணித பாடத்தினை 1 கிழமைக்கு 3 வகுப்புக்கள் வீதம், 4 மாதத்திற்குள் 3 தவணைகளுக்குரிய சகல போசன்களையும் ஆரம்ப அறிவிலிருந்து விஷேட சித்திக்கு 24 வருட அனுபவமுடைய ஆசிரியரினால் சற்பிக்கப்படும். ஆறுமுகநாதன் 10, கச்சேரி கிழக்கு ஒழுங்கை, லோகேந்திரா வீதி, சுண்டிக்குளி. [16376]

### நாவல்கள் இலவசம்

வித்தியாசமான கதைகளில் கருத்தில் சிறந்த நாவகள்ளான மீரா வெளியீடுகள 140/-ரூபாவுக்கு புத்தகங்கள் வாங்குபவர்களுக்கு 40/-ரூபாவுக்கு புத்தகங்கள் இலவசமாக வழங்கப்படுகிறது. துர்க்கா சுன்னாகம், திருக்கணிதம் சாவகச்சேரி, யாழ்ப்பாணத்தில் சகல புத்தகசாலைகளிலும். [16357]


கணித, விஞ்ஞான

**A/L 91 & 92**

புதிய பகுதிகள் ஆரம்பம்

09 - 04 1991

செவ்வாய் காலை 6-30

விவரங்களுக்கு:

**Personal New Science Centre,**

Elilakam Front Lane, Jaffna.

[4006]


### மணமகள் தேவை

இந்து 26 வயதுடைய டென்மார்க் மணமகனுக்கு ஒத்துவரக் கூடிய ஒழுக்கம் உள்ள, அழகுள்ள மணமகள் தேவை. வயது 19 - 24க்கு இடைப்பட்டவராகவும். 8 இல் செவ்வாய், உதயத்தில் செவ்வாய் அவசியம் இருத்தல் வேண்டும் சீதனம் நேரில் பேசிக் கொள்ளலாம். இல. 300 C/O உதயன் யாழ்ப்பாணம். [16291]

### சனி நீராடு

வாரம் ஒரு நாள் தலைக்கு எண்ணெய் தேய்த்து மில்க்வைற் ஒலிவ் ஸ்நானப் பவுடர் பாவித்துத் தலைமுழுகிச் சுகவாழ்வு காணுங்கள் எங்கும் விற்பனையாகிறது மில்க்வைற். [சி-5921]

### மணமகள் தேவை

யாழ். இந்து 30 வயது நிரம்பிய U. S. A. யில் B. Sc கணக்காளராக தொழில் புரியும் 8 செவ்வாயுள்ள பாவம்கூடிய, ஆயில்யம் நட்சத்திர மணமகனுக்கு பட்டதாரி மணமகள் தேவை. தொடர்பு ABCDE விவாகப் பொருத்துனர் 328, நாவலர் றோட் ஆனைப்பந்தி [16372]


## சந்தைப்படுத்தும் முகாமையாளர் தேவை

வளர்ந்துவரும் நிறுவனமொன்றிற்கு ஒரு சந்தைப்படுத்தும் முகாமையாளர் தேவை. இவர் வர்த்தக நெறியை ஒரு பாடமாகக் கொண்டவராகவும், பிரபல நிறுவனங்களில் கொள்வனவு, விற்பனவு, சந்தைப்படுத்தல் துறைகளில் குறைந்தது 10 வருட அனுபவமுள்ளவராகவும் இருக்க வேண்டும்.

தகுதியுடையோர் 21 - 04 - 1991 க்கு முன் பின்வரும் முகவரிக்கு விண்ணப்பிக்கவும். சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.

விளம்பரதாரர்,
மே/பா 301 உதயன்.

[சி-5923]


## காணவில்லை

பிறவுண் வீதியைச் சேர்ந்த

## P. இரத்தினசிங்கம்

என்பவரைக் காணவில்லை இவருக்கு வயது 80 உயரம் 4' பொது நிறம் நரைத்தஓரளவு வழுக்கையுடையவர், தடுமாற்றமுடைய பேசசுடையவர் காணாமல் போனபோது அரைக்கை சாம்பல நிற சட்டையும், இள நீலநிறக்கோடு போட்ட சாறமும் அணிந்து காணப்பட்டார். இவரைப் பற்றிய தகவல் அறிந்தவர்கள் 249, பிறவுண் றோட், எனும் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்.

[4008] சோ. கேதீஸ்வரநாதன்.

## ஓராண்டு நினைவஞ்சலி



### விநாயகமூர்த்தி செல்லச்சாமி

தோற்றம்: 10 - 01 - 1920
மறைவு: 19 - 04 - 1990

எம் மீது பாசமும், அன்பும் காட்டி எல்லோரையும் நல்வழிப்படுத்தி, வழிகாட்டி நடத்தி, எம்மை விட்டுப் பிரிந்தாலும் தங்களது அன்பு குறையாது.

தங்களது ஆத்ம சாந்தியடையக் குடும்பத்தினர் அன்புடன் வேண்டுகிறோம்.

குடும்பத்தினர்.

கொத்தியால், வல்வெட்டித்துறை. [16367]

## கிராமிய வங்கி இடம் மாற்றம்

யாழ்ப்பாணம், ஏப்ரல் 7 காரைநகர் ப. நோ. கூ. சங்கத்தின் விற்பனை நிலையமும், கிராமிய வங்கியும் வளக்கம்பரை அம்மன் கோவிலுக்கு அருகாமையில் உள்ள சங்கானை ப. நோ. கூ. சங்க கிளைக்கு மாற்றப்பட்டுள்ளன

காரைநகரில் இடம்பெறும் இராணுவ நடவடிக்கைகளாலேயே இந்த மாற்றம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. [இ-3]


## இலங்கை அதிபர்கள் சேவை

(Sri Lanka Principals' Service)

தரம் I, II, III க்கான

வரையறுத்த போட்டிப் பரீட்சை

1991 ஜூன் 1இல், 8 இல்

நடைபெறவிருக்கும் பரீட்சைக்கான

### விசேட பயிற்சி வகுப்புகள்

ஆரம்பம்: 20 — 04 — 1991 (9 a.m.)

பாடநெறி: சிரகித்தல், பொது அறிவு, கல்விக்கொள்கையும் திருவாகமும்

தகைமைகள்:

தரம் I: பட்டதாரி 7 வருட சேவை/பயிற்றப்பட்ட ஆசிரியர் 12 வருட சேவை.
தரம் II: பட்டதாரி 5 வருடசேவை / பயிற்றப்பட்ட ஆசிரியர் 10 வருட சேவை.
தரம் III: பயிற்றப்பட்ட ஆசிரியர் 5 வருடசேவை.

★ விண்ணப்பப் படிவங்களையும், விவரத்திரட்டினையும் எம்மிடம் நேரில் பெறலாம்.

விண்ணப்ப முடிவுத் திகதி: 19 — 04 — 1991 ★

1. விரிவுரைகள் சனி, ஞாயிறு விடுமுறை தினங்களில்
2. இலவச பாடக்குறிப்புகள் - வினா - விடைப் பயிற்சிகள்
3. கட்டணம் ரூபா 300/- [முழுப் பயிற்சிகளும்]

விவரங்களுக்கு நேரில்:

**ASTAN INSTITUTE**

101/10, STANLEY ROAD, JAFFNA

[மக்கள் வங்கிக்கு அருகாமையில்]

[சி-5909]



## அதி கூடிய வட்டி 18%.

ஹற்றன் நஷனல் வங்கி வழங்குகிறது.

அதிக வட்டி ஈட்டும். நிலையான வைப்புக்களுக்கு தற்பொழுது ஆண்டுக்கு 18% வழங்கப்படுகிறது. அத்துடன புதுவருடத்தை முன்னிட்டு சுப வேளையில் கணக்குகளை ஆரம்பிப்பதற்காக வங்கி திங்கட்கிழமை [15 - 04 - 1991 காலை 9-15 மணி முதல் 9-45 மணி வரை திறந்திருக்கும் என்பதை அனைவருக்கும் அறியத் தருகிறோம்.

வரையறுக்கப்பட்ட

**ஹற்றன் நஷனல் வங்கி**

54 ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

[இ-5930


எந்தரோ மகானுபாவலு அந்தரிகி வந்தனமுலு

## சிரம் தாழ்த்தி நன்றி கூறுகின்றோம்

## செல்லையா இராமலிங்கம்

காலஞ்சென்ற சட்டத்தரணி, செல்லையா இராமலிங்கம் அவர்கள் சுகவீனமுற்றிருந்த போது பல வகைகளில் உதவி புரிந்தோருக்கும், அன்னாரின் மரணச்சடங்குகளின் போது பேருதவி புரிந்த எமது அயலவர் குடும்பங்களுக்கும், உற்றார், உறவினர், நண்பர்களுக்கும், நலன் விரும்பிகளுக்கும் எமது நெஞ்சம் நிறைந்த தாழ்மையான நன்றியையும், வணக்கத்தையும் செலுத்துகின்றோம்.

அன்னையின் நிழலில்: 01 — 01 — 1911
ஆண்டவன் கழலில்: 22 — 03 — 1991

### அன்னாரின் நினைவாக
### கரம் கூப்பி அழைக்கின்றோம்

11 - 04 - 1991 அந்தியேட்டியும் [வில்லூன்றித் திடலில்]
12 - 04 - 1991 வீட்டுக்கிருத்தியமும் [மு. ப. 9-30]
நடைபெற உள்ளன.

அத்துடன் 12-04-1991 வெள்ளிக்கிழமை அவரின் நினைவாக அளிக்கப்படும் மதிய போசனத்திலும் பங்கேற்குமாறு உறவினர்களையும், அன்னாரின் சகாக்களையும், நலன் விரும்பிகளையும் பணிவன்புடன் அழைக்கின்றோம்.

நன்றி

352, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
மனைவி, மக்கள், மருமக்கள்.
[16361]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## எதிர்கொள்ள தயாராகுங்கள்

அனர்த்தங்கள் தாக்கலாம் — எதிர்கொள்ளத் தயாராக இருங்கள்!

இது இன்றைக்குரிய விசேட சுலோகம். உலக சுகாதார தினமான இன்று — ஏப்ரல் ஏழாம் திகதிக்கென — ஐக்கிய நாடுகள் சபை பிரகடனப்படுத்தியுள்ள சுலோகம்.

சுத்தம் சுகம் தரும். வாழ்க்கைக்கு ஆதாரம் சுகம். அதுவே சுகாதாரம் ஆனது. மனிதன் சுகதேகியாக இருந்தால் மட்டுமே அவனது வாழ்க்கை வளமுடையதாகும். அவன் நோயாளி ஆகிவிட்டால் வாழ்க்கையின் எந்தத்துறையிலும் அவனால் முன்னேற இயலாது. எத்தனை வசதிகள் இருந்தாலும் வாழ்க்கையை அனுபவிக்க முடியாது.

மனிதன் எவ்வாறு முயன்றாலும், முற்காப்பு நடவடிக்கைகளை எடுத்தாலும், அவனது தேகநலனைக் கெடுத்து உயிருக்கு ஆபத்து விளைவிக்க, இயற்கை ஏதோ ஒரு விதத்தில், வகையில் — ஏதோ ஒரு வடிவத்தில் — அனர்த்தம் புரிந்து கொண்டே இருக்கும்.

நடைமுறையில் உள்ள கொடிய வியாதிகளுக்கு, உயிர்க் கொல்லி வியாதிகளுக்கு தடுப்பு மருந்துகள், குணமாக்கும் மருந்துகள் கண்டுபிடிக்கப்படும் அதே வேளை, புதுப்புது வியாதிகள் தோன்றி மனிதனைப் பயமுறுத்தும்.

இவை இயற்கை தரும் அனர்த்தங்களாயினும், அதற்கு மறைமுகமாகக் காரணியாக பின்புலத்தில் நிற்பவன் மனிதனே. தனக்கு வாழ்வும், உயிருட்டமும் அளிக்கும் இயற்கை அன்னையை மனிதன் சீண்டுவதினாலும் சீர்குலைப்பதினாலுமே இயற்கையும் சீற்றமடைந்து மனிதனுக்கு எதிரியாக மாறுகிறது.

இயற்கையின் அனர்த்தங்கள் உலகின் எந்தப் பகுதியிலும், எந்த வேளையிலும், எந்த வடிவிலும் வரலாம். அவற்றை நிர்ணயித்து, நிச்சயப்படுத்திச் சொல்ல முடியாது. அதனால்தான் இயற்கையின் அனர்த்தங்களை எந்த வேளையிலும் எதிர்கொள்ளத் தயாராக இருக்குமாறு ஐ. நா. சுலோகம் எச்சரிக்கிறது.

இயற்கை சீற்றம் கொண்டுவிட்டால் - அந்தச் சீற்றத்தின் வடிவம் கொடிய தொற்று நோயாக இருக்கலாம், சூறாவளியாக இருக்கலாம், வெள்ளப்பெருக்காக இருக்கலாம், பூகம்பமாக இருக்கலாம் - அதனை எதிர்த்து முற்றாக வெற்றி கொள்வது என்பது கடினம். ஆனால் கவனமாக இருந்தால், முன்னெச்சரிக்கையுடன் செயற்பட்டால், எதிர்கொள்ளும் வலுவுடன் இருந்தால் பின்விளைவுகளையாவது ஆபத்து நிலைக்கு எட்டாதவாறு தடுக்கலாம்.

இதே வேளை, சுகாதாரத்தைப் பேணுவதும், சுற்றாடலைப் பேணுவதும் ஒன்றுக்கு மற்றது தொடர்புடையது. இரண்டையும் சரிவரப் பேணின் இயற்கையின் அனர்த்தங்களை நிச்சயமாகக் குறைக்கலாம். இது விடயத்தில் இயற்கையை விட மனிதன் உண்டாக்கும் செயற்கை அனர்த்தங்கள் குறித்தே கவனமாக இருக்க வேண்டும். அதாவது மனிதன் தன்னைக் காப்பாற்றுவதற்குத் தானே விழிப்புடன் நடந்துகொள்ளுதல் அவசியம். இயற்கையைக் குறைசொல்வதைவிட, தனது குற்றத்தை உணர்ந்து அதனைத் தவிர்த்துக் கொள்ள வேண்டும்.

# ஊனமடைந்தோர் நலன்புரித்திட்டம் பிரெஞ்சு நிறுவனம் பொறுப்பேற்கும்

யாழ்ப்பாணம், ஏப்பிரல் 7

பெல்ஜியம் நாட்டு அமைப்பால் நடைமுறைப்படுத்தப்பட்டு, தற்போது நிறுத்தப்பட்டுள்ள ஊனமடைந்தோர் நலன்புரித்திட்டத்தை பிரெஞ்சு நிறுவனம் பொறுப்பேற்க இருக்கிறது.

வடக்கு-கிழக்கு மாகாணத்தில் பெல்ஜியம் நாட்டு நிறுவனம் ஒன்றினால் ஊனமடைந்தோருக்கு உதவும் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வந்தது.

கடந்த ஜூன் மாதத்துக்குப் பின்னர் இந்த நிறுவனத்தின் பிரதிநிதிகள் யாழ்ப்பாணம் வருவதற்கு இலங்கை அரசு அனுமதி வழங்காததை அடுத்து, இந்த நிறுவன அதிகாரிகள் தமது செயல் திட்டங்களை நிறுத்தி விட்டு தாயகம் திருப்பி இருந்தனர்.

கடந்த வியாழனன்று யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்த பிரெஞ்சு நிறுவனமான எம். எஸ் எவ். நிறுவனப் பிரதிநிதிகள், இந்த செயல்திட்டத்தை தமது பொறுப்பில் உள்ள சிறுவர் பாதுகாப்பு நிதியத்தின் உதவியுடன் நடைமுறைப்படுத்துவது தொடர்பாக ஆராய்ந்தனர். [இ-3]

## சனசமூக நிலையங்களுக்கு நன்கொடைப் பணம்

கொழும்புத்துறை, ஏப்ரல் 7

சனசமூக நிலையங்களின் 1989 — 1990 ஆம் ஆண்டுகளுக்கான நன்கொடைப் பணம் சம்பந்தப்பட்ட சகல உள்ளூராட்சி மன்றங்களுக்கும் அனுப்பப்பட்டுள்ளது. இந்தப் பணத்தை 1989 ஆம் ஆண்டு வரை எவ்வித தஸ்தாவேஜுவையும் பரிசிலனை செய்யாது கொடுக்கும்படி பணிக்கப்பட்டுள்ளது.

1990 ஆம் ஆண்டுக்கான நன்கொடைப் பணத்தை சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் சிபார்சின் படி கொடுக்கும்படி பணிக்கப்பட்டுள்ளது.

சனசமூக நிலையங்கள் தங்களுடைய நன்கொடைப் பணத்தை உடனடியாகப் பெற்றுக் கொள்ளும்படி வேண்டப்படுகின்றன. மே மாதம் 15 ஆம் திகதிக்குப் பின்னர் இந்தப் பணம் வழங்கப்படமாட்டாது என்று அறிவிக்கப்பட்டுள்ளது. [இ-30]

## மீன் பிடிக்கச் சென்ற இலங்கை அகதிகள் காயம்

சென்னை, ஏப்ரல் 7

கச்சதீவுக் கடலில் மீன் பிடித்துக் கொண்டிருந்த மீனவர்கள் மீது இலங்கைப் படையினர் சுட்டதில் 4 இலங்கைத் தமிழ் அகதி மீனவர்கள் காயமடைந்தனர்.

மண்டபம் முகாமில் தங்கி இருந்த அந்த அகதிகளும் இந்திய மீனவரும் சேர்ந்து கச்சதீவுக் கடலில் மீன் பிடித்துக் கொண்டிருந்தனர். அப்போதுதான் இலங்கைப் படையினரின் துப்பாக்கிப் பிரயோகத்திற்கு ஆளாகினர். [இ-எ]

## விபுலானந்தர் தினத்தில் தமிழ்மொழித் தின விழா

கொழும்பு, ஏப்ரல் 7

அகில இலங்கை தமிழ் மொழித் தினவிழா இனி ஆண்டுதோறும் சுவாமி விபுலானந்தரின் நினைவு தினமான ஜூலை 19ஆம் திகதி நடத்தப்படும் என்று கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

இதன் படி இந்த ஆண்டுக்கான அகில இலங்கைத் தமிழ் மொழி தினவிழா எதிர்வரும் ஜூலை 19ஆம் திகதி கொழும்பில் நடத்தப்படும்.

இத்தகவலை கல்வி அமைச்சின் தமிழ் கல்விப் பணிப்பாளர் திரு. வெ சபாநாயகம் தெரிவித்தார்.

இதற்கான மாகாண, மாவட்ட நிலைப் போட்டிகள் அனைத்தும் மே மாதத்திற்கு முன்னர் நடந்து முடிந்து விடும் என்றும் திரு. சபாநாயகம் சொன்னார். [இ-எ]

## குர்டிஷ் அகதிகளுக்கு விமானம் மூலம் நிவாரணம்

வாஷிங்டன், ஏப். 6

துருக்கி மற்றும் ஈராக்கின் எல்லைகளில் உள்ள மலைத் தொடர்களில் தஞ்சமடைந்துள்ள லட்சக்கணக்கான ஈராக்கின் குர்டிஷ் இன அகதிகளுக்கு உணவு, கம்பளி மற்றும் உடுதுணிகளை நேரடியாக வழங்க அமெரிக்காவும், பிரிட்டனும் முன்வந்துள்ளன.

இன்று [ஞாயிறு] முதல் அமெரிக்க விமானங்கள் மூலம் உதவிப் பொருள்கள் அடங்கிய பார்சல்களை மலைத் தொடர்களில் போடுவதற்கு ஏற்பட்டாகி உள்ளது.

ஈராக்கின் வான் பிராந்தியத்தில் பிரவேசித்து இப்பொருள்களைப்போடுவதற்கு அமெரிக்கா ஈராக்கின் அனுமதியைப் பெறவில்லை.

ஈராக் மண்ணில் அமெரிக்கப் படைகள் நிலை கொண்டு இருப்பதால் அந்த அனுமதி தேவையில்லை என்று அமெரிக்கா அறிவித்துள்ளது.

இதே வேளை குர்டிஷ் தொடர்பான ஐ. நா. தீர்மானம் தமது இறைமையை மீறுவதாக உள்ளது என்று ஈராக்குற்றஞ்சாட்டியுள்ளது.

## குர்டிஷ் அடக்குமுறையை கண்டித்துத் தீர்மானம்

வாஷிங்டன், ஏப் 6

குர்டிஷ் இனமக்கள் மீது இராணுவ அடக்குமுறை நடவடிக்கைகளை மேற்கொண்டு வரும் ஈராக்கின் செயலை ஐ. நா. பாதுகாப்புச் சபை நேற்று வன்மையாகக் கண்டித்தது.

உலக நாடுகள் வழங்கும் மனிதாபிமான [illegible] உதவிகளைக் குர்டிஷ் மக்களுக்குக் கிடைக்கச்செய்ய உதவும்படியும் ஈராக்குக்கு ஐ. நா. பாதுகாப்புச் சபை கோரிக்கை விடுத்துள்ளது.

இது தொடர்பாகபிரான்ஸ் கொண்டுவந்த பிரேரணைக்கு ஆதரவாக பத்து நாடுகள் வாக்களித்தன. சிம்பாப்வே, யேமன், கியூபா ஆகிய நாடுகள் எதிர்த்து வாக்களித்தன. [illegible] வில்லை. [இ-எ]

## மாவட்டங்களில் பல்கலைக்கழக கல்லூரிகள்

25 மாவட்டங்களிலும் 25 பல்கலைக்கழக கல்லூரிகள் நிறுவப்படும்.

இத்தகவலை ஜனாதிபதி பிரேமதாஸ ஹினிதுமவில நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் வெளியிட்டார்.

மாகாணத்திற்கு ஒன்று வீதம் நிறுவப்படவுள்ள 3 மாகாண பல்கலைக்கழகக் கல்லூரிகள் நிறுவும் திட்டத்துக்கு புறம்பாக இத்திட்டம் செயற்படுத்தப்படும் என்றும் ஜனாதிபதி சொன்னார்.

## பாம்புக் கடி

கடந்த மார்ச் மாதத்தில்மட்டும் வடபகுதியில் 29பேர்பாம்புக்கடிக்குஇலக்காகி, யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

இதில் மூவர் மரணமடைந்துள்ளனர். ஏனையோர் சிகிச்சையின் பின் வீடு திரும்பினர்.

பாம்பினால் கடியுண்டவர்களில் பெரும்பாலானவர்கள் கிளிநொச்சி, கைதடி, உரும்பராய் ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்கள். [இ-த]

## இப்படியும் நடக்கிறது

மானிப்பாய், ஏப்ரல் 7

மயக்கம் வருவதாகக் கூறி படுப்பதற்கு இடம் கேட்டாராம் முன் பின் தெரியாத நபர் ஒருவர். வீட்டுக்காரரர் நம்பி இடம் கொடுத்தார். அதிகாலையில் வீட்டுக் காரரின் சைக்கிளுடன் அந்த நபர் தலைமறைவாகி விட்டாராம்.

இந்தச் சம்பவம் உடுவில் டச் வீதியில் சமீபத்தில் நடந்தது. [இ-த-90]

## தீவுப்பகுதி போக்குவரத்து தொடர்ந்து ஸ்தம்பித நிலை

நெடுந்தீவு. ஏப்ரல் 7

நெடுந்தீவுக்கும் மற்றும் அனலைதிவு, எழுவைதீவு, நயினாதீவு ஆகிய இடங்களுக்கும் செல்வதற்காக குறிகாட்டுவானில் தங்கி உள்ள பயணிகள் தமது பாதுகாப்புக்கு உத்தரவாதம் இல்லாத நிலையில் இருந்து வருகின்றனர்.

காரைநகரில் இடம் பெற்ற மோதல்களை அடுத்து கடந்த திங்கட்கிழமை முதல் குறிகாட்டுவான் - நெடுந்தீவு படகுச் சேவை நடைபெறாதது தெரிந்ததே.

இப் படகுச் சேவையை தற்போது மீண்டும் ஆரம்பிக்கும் சூழ்நிலை உருவாகி உள்ள போதிலும் பயணிகள் கடற்படையினருக்கு அஞ்சி குறிகாட்டுவான் இறங்கு துறையிலேயே தங்கி உள்ளனர்.

வழமையான கடற்படைப் பரிசோதனைக்காக நயினா தீவுக்குப் படகுகள் செல்ல வேண்டி இருப்பதாலேயே இந்த அச்சம் நிலவுகிறது.

இந்த விவகாரத்தில் செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவின் உதவியை நாடும் முயற்சியும் மேற்கொள்ளப்படுகிறது. [இ-111]

## மட்டுவிலில் அஞ்சலி

காரைநகரில் இராணுவத்துடன் இடம்பெற்ற நேரடி மோதலில் வீரமரணம் அடைந்த இரண்டாவது லெப்டினட் இளங்கோ [திருமலை] வின் புகழுடம்பு பொது மக்களின் அஞ்சலிக்காக மட்டுவில் தெற்கு சோமஸ்கந்தா சனசமூக நிலையத்திலும், மட்டுவில் வடக்கு மோகனதாஸ் சனசமூக நிலையத்திலும் வைக்கப்பட்டது.

மக்கள் திரளாகக் கூடி அஞ்சலி செலுத்தினர்.

அங்கிருந்து ஊர்வலமாக சாவகச்சேரி இந்துக் கல்லூரிக்கு புகழுடம்பு எடுத்துச் செல்லப்பட்டு, மக்களின் இறுதி அஞ்சலிக்கு வைக்கப்பட்டபின் கொடிகாமம் மாவீரர் மயானத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டது. [இ-31]

## விவசாயப் பொருள்

மானிப்பாய், ஏப்ரல் 7

மானிப்பாய் வடக்கு ஐக்கிய நாணய சங்கத்தினர் தமது உறுப்பினர்கள் 36 பேருக்கு அமெரிக்க உதவி ஸ்தாபனத்திடமிருந்து விவசாய பொருள்களை வாங்கி வழங்கியுள்ளனர். [இ 90]

## உலக சுகாதார தினம்

உலக சுகாதார தினம் இன்று 7 ஆம் திகதி அனுஷ்டிக்கப்படுகிறது. அதனையொட்டி இக்கட்டுரை பிரசுரமாகிறது.

அண்மைய தசாப்தங்களில் சுகாதாரம் உட்பட்ட பல்வேறு அபிவிருத்திகள் குறிப்பிடத்தக்களவு ஏற்படும் வேளையில், இயற்கையினாலும் மனிதனினாலும் விளையும் அனர்த்தங்கள் இவற்றை பின்னடையச் செய்கின்றன.

இவ் அனர்த்தங்களினால் ஏற்படும் சீர்கேடுகளையும், பின்னடைவுகளையும் கவனத்தில் கொண்டே எதிர்கால நீண்ட உலக சுகாதாரத் திட்டங்கள் வகுக்கப்பட வேண்டி உள்ளன.

''அனர்த்தங்கள்'' என்பதனை உலக சுகாதார ஸ்தாபனம், உலகின் எப்பகுதியிலும் எவ்வேளையிலும் எதிர்பாராத விதமாக உயிர்ச்சேதம் அடங்கலாக ஏற்படும் சமூக, பொருளாதார, சேவைகளின் அழிவு, சேதாரம் என குறிப்பிட்டுள்ளது.

''அனர்த்தங்கள்'' ஓர் அதிர்ஸ்டவசமானவை. அவற்றை எந்த சக்தியாலும் முழு அளவில் வெற்றிகொள்ள முடிவதில்லை. ஆயினும் ஆயத்த நிலையில் எப்பொழுதும் இருக்க முடியுமாயின் அதன் பின் விளைவுகளை ஆபத்து நிலையை தாண்டாதவாறு சீர் செய்ய முடியும். இதற்கு சர்வதேச சமூகத்தினது ஒருங்கிணைவும், கூட்டுறவும், செயற்பாடும் இன்றியமையாதவை.

இதனை அடிப்படையாக வைத்துத்தான் ஐக்கிய நாடுகள் 1.990-2,000 ஆண்டுகளை சர்வதேச அனர்த்தங்கள் குறைப்பு தசாப்தமாக பிரகடனம் செய்துள்ளன.

இவ் வகையில் இந்த ஆண்டிற்கான உலக சுகாதார தினத்தின் சுலோகம் பின்வருமாறு. உலக சுகாதார ஸ்தாபனத்தினால் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. ''அனர்த்தங்கள் தாக்கலாம் - எதிர் கொள்ளத் தயாராக இருங்கள்'' என அமைந்துள்ளது.

நன்றி,
ஐக்கிய நாடுகள் சங்கம்,
யாழ் பிரிவு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியா - பாகிஸ்தான் பதற்றத் தணிப்பு ஒப்பந்தம்

எல்லையில் பதற்றத்தைத் தணிக்க உதவும் உடன்படிக்கை ஒன்றில் இந்தியாவும் பாகிஸ்தானும் நேற்று கையெழுத்திட்டன.

வான் பிராந்திய மீறல்களை தடுப்பது, வான் பிராந்தியத்தை இராணுவ ரீதியில் பயன்படுத்துவது குறித்து பரஸ்பரம் தகவல்களை பரிமாறிக்கொள்வது தொடர்பாக இந்த உடன்படிக்கை செய்யப்பட்டுள்ளது. [ஜ-எ]

## போதை வஸ்து குற்றச்சாட்டு:

# உலகப் புகழ் மரடோனா போட்டிகளில் பங்குபற்றதடை

உதைபந்தாட்டப் போட்டிகள் எதிலும் பதினைந்து மாதங்களுக்கு விளையாடக் கூடாது என்று உலகப் புகழ் பெற்ற உதைபந்தாட்ட வீரர் டியேகோ மரடோனாவுக்கு தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

சர்வதேச உதைபந்தாட்டச் சம்மேளனம் இந்தத் தடையை நேற்று விதித்தது.

கொக்கெயின் போதை வஸ்து பாவித்த பின்னர் உதைபந்தாட்டப் போட்டி ஒன்றில் மரடோனா கலந்து கொண்டது கண்டுபிடிக்கப்பட்டதே இத் தடை விதிக்கக் காரணமாக அமைந்தது.

வைத்திய பரிசோதனையின் போது அவரது சிறுநீரில் போதைவஸ்து பாவித்த தடயங்கள் இருக்கக் கண்டு பிடிக்கப்பட்டன.

மரடோனா ஆர்ஜென்ரீனா நாட்டைச் சேர்ந்தவர் ஆவார். [ஓ-எ]

## ஹரியானாவில் ஜனாதிபதி ஆட்சி

புதுடில்லி, ஏப். 7

ஹரியானாவில் ஜனாதிபதி ஆட்சி பிரகடனம் செய்யப்பட்டுள்ளது

மாநில சட்டசபையும் கலைக்கப்பட்டு, முதலமைச்சர் ஓம் பிரகாஷ் சௌதாலா தலைமையிலான அமைச்சரவையும் பதவி நீக்கம் செய்யப்பட்டது

இதற்கான உத்தரவை ஜனாதிபதி வெங்கட்ராமன் நேற்றுப் பிறப்பித்தார். [ஓ-எ]

# சதாமின் மருமகன் பாதுகாப்பு அமைச்சர்

பக்தாத், ஏப்.

ஈராக்கின் புதிய பாதுகாப்பு அமைச்சராக ஜெனரல் ஹுஸைன் கமால் ஹஸன் நேற்று நியமிக்கப்பட்டார்

இவர் ஜனாதிபதி சதாம் ஹுசேனின் மருமகன் ஆவார்.

குர்டிஷ் மற்றும் ஷியாத் முஸ்லிம் கிளர்ச்சியாளர்கள் நடத்திய சண்டைகளை அடக்குவதில் கமால் ஹசன் முன்நின்று செயற்பட்டார் என்று கூறப்படுகிறது.


21 ஆம் நாள் நினைவும்

## அந்தியேட்டி அழைப்பும்

### திரு. பொ. சோமசேகரம்

[யாழ் தபாற்கந்தோர் - தபால் தரம் பிரிப்பாளர்]

தோற்றம்: 10-12 1940 ★ ★★ மறைவு: 19-03- 991

உங்கள் வாழ்நாளெல்லாம் எங்கள் நல்வாழ்வுக்காக அயராது உழைத்து எம்மை உயர் நிலையில் வைத்த அப்பா! உங்களை என்றும் நாம் மறவோம்.

அன்னாரின் அந்தியேட்டிக் கிரியைகள் 08-04-91 திங்கட்கிழமை 113, கச்சேரி நல்லூர் வீதியில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் நடைபெற இருப்பதால் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

295, கச்சேரி நல்லூர் வீதி,
யாழ்ப்பாணம்.

—மனைவி, பிள்ளைகள்—

[16380]



## மரண அறிவித்தல்

### சபாலிங்கம் உதயலிங்கம் [ரஞ்சன்]

சபாலிங்கம் உதயலிங்கம் [பிரித்தானிய தொலைத்தொடர்பு பொறியியலாளர்] இலண்டனில் 4 - 4 - 91 அன்று காலமானார்.

அன்னார் பிரேமகுமாவின் அன்புக் கணவரும், சாரங்கன், சரவணன் ஆகியோரின் அருமைத் தகப்பனாரும், காலஞ்சென்ற திரு திருமதி இளையதம்பி சபாலிங்கம் [முன்னாள் கல்லூரி அதிபர்] அவர்களின் அன்பு மகனும், வைத்திய ஆலோசகர் ஜோதிலிங்கம் [லண்டன்], திருமதி ராஜினி புவனேந்திரராஜ் [கோலாலம்பூர்], திருமதி ஜெகதாம்பிகை ஆனந்தபாஸ்கரன் [லண்டன்], திருமதி உதயகுமாரி மகேந்திரன் [பாரேன்], ஜெடலிங்கம் [பொறியியலாளர், லண்டன்], அபயலிங்கம் [கணக்காளர், லண்டன்], திருமதி கலைச்செல்வி நடேந்திரன் [கணக்காளர், லண்டன்] ஆகியோரின் அன்புச் சகோதரனும், இ. கனகலிங்கம் [முன்னாள் கல்லூரி அதிபர்] அவர்களின் பெறாமகனும் ஆவார்.

தகவல்:

98, அரசடி வீதி,
யாழ்ப்பாணம்.

இ. கனகலிங்கம்

[16517]


## வளைகுடாவில் நிரந்தர யுத்தநிறுத்தம்:

# ஐ.நாவின் கடும் நிபந்தனைகளை ஈராக் பெரும் கஷ்டத்துடன் ஏற்றது!

பக்தாதி, ஏப். 7

வளைகுடாவில் நிரந்தர யுத்த நிறுத்தம் ஒன்றை முறையாகச் செய்துகொள்ள ஐ. நா. பாதுகாப்புச் சபை விதித்த கடும் நிபந்தனைகளை ஏற்றுக்கொள்வது என்று ஈராக் அறிவித்துள்ளது.

யுத்த நிறுத்தத்தை ஏற்றுக் கொள்வது என்ற தீர்மானத்தை ஈராக்கின் நாடாளுமன்றம் 160—31 வாக்குகளால் ஏற்றுக்கொண்டது.

நாடாளுமன்றச் சபாநாயகர் பேசுகையில்—

"ஐ. நா. பாதுகாப்புச் சபைத் தீர்மானம் அநீதியானது. ஆனால் அத் தீர்மானத்தை ஏற்றுக்கொள்வதைத் தவிர, ஈராக்குக்கு வேறு வழி கிடையாது. யுத்த நிறுத்த நிபந்தனைகள் அடங்கிய ஐ. நா. பாதுகாப்புத் தீர்மானம், அமெரிக்காவினுடையதே தவிர ஐ. நா.வினுடையது அல்ல என்று தெரிவித்தார்.

ஐ. நா. மேற்பார்வையில் ஈராக் தன்னிடமுள்ள இரசாயன மற்றும் நுண்ணுயிர்க் கிருமிகள் அடங்கிய ஆயுதங்கள் மற்றும் நீண்ட தூர ஏவுகணைகளை குறிப்பிட்ட கால எல்லைக்குள் அழித்துவிட வேண்டும் என்பது உட்பட பல நிபந்தனைகளை ஐ. நா. விதித்துள்ளது. [ஓ-எ]

## கிழக்கில்....

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

கொல்லப்பட்டனர்.

### அம்பாறை

அம்பாறை மாவட்டத்தில் பொலீஸ் அதிரடிப் படையைச் சேர்ந்த ஒருவரை விடுதலைப் புலிகள் சுட்டுக்கொன்றனர்.

### திருகோணமலை

திருகோணமலை மாவட்டத்தில் இராணுவ வாகனம் ஒன்று கண்ணி வெடியில் சிக்கியதில் ஒரு இராணுவ அதிகாரியும் சிப்பாயும் கொல்லப்பட்டனர். ஆறு சிப்பாய்கள் காயமடைந்தனர்.

### மூதூர்

மூதூரில் விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதலில் இரண்டு பாதுகாப்புப் படையினர் கொல்லப்பட்டனர்.

இன்னொரு சம்பவத்தில் சிப்பாய் ஒருவர் உயிரிழந்தார்.

—இத் தகவல்களை ஸ்ரீலங்கா இராணுவ அதிகாரிகளை மேற்கோள்காட்டி ஏஜென்ஸிச் செய்திகள் தெரிவித்தன. [உ-எ]

## அரசின்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

பொருள்கள் குறைவாகக் கிடைப்பது குறித்து மாநாட்டில் பின்வரும் அம்சங்கள் முன்வைக்கப்பட்டன.

★ அத்தியாவசிய சேவைகள் நாயகம் யாழ். மாவட்டத்துக்கு அரசாங்க சார்பிலும், தனியார் துறைமூலமும் அனுப்பக்கூடிய பொருள்களின் தொகையை கூட்டுப் படைத் தலைமையகத்துக்குச் சிபார்சு செய்கிறார்.

★ சிபார்சு செய்யப்படும் பொருள்களின் தொகையை விட குறைந்த அளவைக் கொண்டு வருவதற்கே கூட்டுப் படைத் தலைமை அலுவலகம்.

அனுமதிக்கப்பட்டவற்றில் கப்பல் மூலம் கொண்டு வரப்படும் பொருள்களின் தொகையில் அவ்வளவு வித்தியாசம் இல்லை.

★ ஆனால் வாகனங்கள் மூலம் கொண்டு வரப்படும் பொருள்களின் பெரும்பாலானவை வவுனியாவில் வைத்துத் திருப்பி அனுப்பப்படுகின்றன.

★ பல தடைகளையும் தாண்டி ஓரளவு — மிகக் குறைந்த — பொருள்களே இங்கு வந்து சேர்கின்றன. ஆனால் அத்தியாவசிய சேவைகள் நாயகம் தெரிவிக்கும் புள்ளி விவரங்கள் கைக்குச் சேர்வதைவிட அதிகமாக இருக்கின்றன.

★ இது குறித்து புள்ளி விபரங்களைச் சம்பந்தப்பட்டவர்களுக்கும் தெளிவு படுத்தவேண்டும். [அ-3]

## மாநகர எல்லைக்குட்பட்ட

# வர்த்தக நிலையங்கள் ஞாயிறு தோறும் மூடப்படும்

யாழ்ப்பாணம், ஏப். 7

யாழ்ப்பாணம் மாநகர சபை எல்லைக்கு உட்பட்ட சகல வர்த்தக நிலையங்களும் எதிர்வரும் சித்திரைப் புத்தாண்டுக்குப் பின்னர் — ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் மூடப்பட்டு சகல ஊழியர்களுக்கும் விடுமுறை வழங்கப்படும்.

நேற்று நடைபெற்ற யாழ். வர்த்தக சங்கத்தின் நிர்வாக சபைக் கூட்டத்தில் இவ்வாறு முடிவு செய்யப்பட்டது.

புத்தாண்டுக்குப் பின்னர்—ஞாயிற்றுக் கிழமைகளில் ஹோட்டல்கள், சாப்பாட்டுக் கடைகளைத் தவிர ஏனைய கடைகள் அனைத்தும் மூடப்பட்டிருக்கும் என்று தெரிவிக்கப்பட்டது. [ஓ-15]

## யாழ். ஆஸ்பத்திரியில்

# அதி தீவிர சிகிச்சைப் பிரிவு மீண்டும் இயங்குகிறது

யாழ்ப்பாணம், ஏப். 7

யாழ் ஆஸ்பத்திரியின் அதி தீவிர சிகிச்சைப் பிரிவு மீண்டும் ஓரளவு இயங்கத் தொடங்கியுள்ளது.

கடந்த ஜூன் மாதத்திற்குப் பின்னர் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கையின் போது இந்தப் பிரிவு பெருமளவு சேதமுற்று செயல் இழந்து இருந்தது.

மின்சார வசதி முழு அளவில் இல்லாததால் இந்தப் பிரிவு முழுமையாக இயங்க முடியாவிடினும், சாதாரணமான நிலையில் சேவையைத் தொடரும் என்று ஆஸ்பத்திரி வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்தப் பிரிவு பூரணமாக இயங்குவதற்கு 24 மணி நேரமும் மின்சார வசதி தேவைப்படும் என்று தெரிவிக்கப்பட்டது. [ஓ-15]

## போராளி....

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக்குழு—வட்டாரங்களோ அல்லது விடுதலைப் புலிகள் வட்டாரங்களோ உறுதி செய்யவில்லை.

ஸ்ரீலங்கா அரசுப் படைகள் சடலங்களை ஒப்படைத்திருந்தாலும் கூட, அவை உண்மையில் போராளிகளினுடையவையா அல்லது அப்பாவிப் பொதுமக்களினுடையவையா என்பதை முதலில் கண்டறிய வேண்டியிருக்கும் என்று சுயேட்சையான செய்தி வட்டாரங்கள் சுட்டிக் காட்டின

சடலங்களைச் செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு பொறுப்பேற்றிருந்தால், அவை மாங்குளத்தில் வைத்து விடுதலைப் புலிகள் வசம் கையளிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுவதாக மற்றொரு செய்தி தெரிவித்தது. [உ-எ]

## திருமலை...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

கப்பட்டது

இதேசமயம்—

திருமலை மாவட்டத்தில் நடந்த கண்ணிவெடிச் சம்பவம் ஒன்றில் இராணுவ வாகனம் ஒன்று சிக்கியது என்றும்—

அதில் ஓர் இராணுவ அதிகாரியும் ஒரு சிப்பாயும் கொல்லப்பட்டனர் என்றும்—

மற்றும் ஆறு சிப்பாய்கள் காயமடைந்தனர் என்றும்—கொழும்பில் இராணுவ வட்டாரங்கள் தெரிவித்தன. [ஓ]

## வீரமரணம்

யாழ்ப்பாணம், ஏப் 7

சிங்கள இராணுவப் படையினருடன் கடந்த வியாழக் கிழமை நடந்த சண்டையில் தீபன் [சுப்பிரமணியம் சுகந்தகுமார்—குமரகோட்டம், வட்டுக்கோட்டை] வீரமரணமடைந்தார்.

இவரது புகழுடம்பு நேற்று இறாத்தலடிச் சந்தையில் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு, பின்னர் கோப்பாய் மாவீரர் மயானத்தில் தகனம் செய்யப்பட்டது. [ஓ]

## வேம்படியில் இன்று

யாழ்ப்பாணம், ஏப். 7

இலங்கை கல்வி நிர்வாக சேவை தரம் III போட்டிப் பரீட்சைக்கு அதிபர், ஆசிரியர்களைத் தயார் செய்வதற்கான முதல் நாள் பயிற்சி வகுப்பு இன்று காலை 9 மணிக்கு யாழ். வேம்படி மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இலங்கைத் தமிழ் ஆசிரியர் சங்கத்தின் ஏற்பாட்டில் நடைபெறவுள்ள மேற்படி பயிற்சி வகுப்பை வடபிராந்திய கல்விப்பணிப்பாளர் திரு. இ. சுந்தரலிங்கம் ஆரம்பித்து வைப்பார். [ஓ-5]

## பரீட்சை இங்கு நடக்கும்

தொலைக்கல்வி பயிற்சி நெறிப்பரீட்சை இம்முறை யாழ்ப்பாணத்தில் நடத்தப்படவிருக்கிறது

கல்விப்பணிப்பாளர் திரு. இ. சுந்தரலிங்கம் இவ்வாறு தெரிவித்தார்.

இந்தப் பரீட்சையை எதிர்வரும் 25 ஆம் திகதி இங்கு நடாத்த கல்வி அமைச்சு அனுமதி வழங்கியுள்ளதாக அவர் மேலும் சொன்னார். [ஓ-3]

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேசன் [பிறைவேட்] லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 07 - 04 - 1991 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org